(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2008) மற்றும் 2008 ஆம் ஆண்டு தியாகராஜர் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2008) ஆகியவை மீதான ஆய்வுக் குழு தனது அறிக்கையினைப் பேரவைக்கு அளிப்பதற்கான காலவரையறையினை மேலும் ஆறு மாதங்களுக்கு இப்பேரவை நீட்டிக்கிறது"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

ஆய்வுக் குழுவின் காலவரையறையானது மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிக்கப்படுகிறது.

பிற்பகல் 2-30

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஊ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை/ ஆட்சிக் குழு/கல்விக் குழு/நிருவாகக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பின்வரும் பல்கலைக் கழகங்களில் ஆட்சிமன்றப் பேரவை (Senate) ஆட்சிக் குழு (Syndicate) கல்விக் குழு (Academic Council) மற்றும் நிருவாகக் குழு (Board of Management) ஆகியவற்றிற்குக் கீழ்க்காணும் மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து முறையாக வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளன:

சென்னைப் பல்கலைக்கழகம்:

திரு. வி.எஸ். பாபு

திரு. எஸ்.வி. சேகர்

டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி

டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்

திரு. ஞா. செந்தமிழன்

திரு. பி. பலராமன்

மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்:

திரு. நா. இராமகிருஷ்ணன்

திரு. எம். அன்பழகன்

திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்

திரு. இரா. விசுவநாதன்

பாரதிதாசன் பல்கலைக்கழகம்:

திரு. கூ.ந. சேகரன்

திரு. கரி. இராமசாமி

அழகப்பா பல்கலைக்கழகம்:

திரு. உதயம் சண்முகம்

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம்:

திரு. கு. பிச்சாண்டி

திரு. ஆர். வைத்திலிங்கம்

பெரியார் பல்கலைக்கழகம் :

திரு. இரா. இராஜேந்திரன்

திரு. கு. சின்னதுரை

2010 ஜனவரி 11] [பேரவைத் தலைவர்]

அண்ணா பல்கலைக்கழகம், சென்னை:

திரு. டி. சுதர்சனம்

திருவள்ளுவர் பல்கலைக்கழகம் :

திரு. ஆர். காந்தி

திரு. சி. ஞானசேகரன்

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்:

திரு. எம்.என். கந்தசாமி

தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் முறையாக வரப்பெற்ற வேட்பு மனுக்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், வேட்பு மனு அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்றாண்டுகளாகும். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் ஏதாவது ஒரு காரணத்திற்காகப் பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு அவர்களுடைய உறுப்பினர் பதவி முடிவடையும்.

12. புதிய வளாகத்தில் சட்டமன்றம் செயல்படவிருப்பதையொட்டி முதலமைச்சருக்குப் பேரவைத் தலைவரின் வாழ்த்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று எண்ணற்ற பெருமைகளையும் பண்பாட்டு மரபுகளையும் நெடிய வரலாற்றுப் பின்னணிகளையும் கொண்ட இச்சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் பேரவைக் கூட்டம் நடைபெறும் கடைசி நாள். தமிழக வரலாற்றில் பொன்னேட்டில் புதிய அத்தியாயம் தொடங்கும் நிகழ்ச்சி. தமிழ்நாட்டிற்குப் பொன்னாரமாய் புதுச் சட்டமன்ற வளாகம் கட்டப்பட்டு அக்கட்டடத்தில் அடுத்த பேரவைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

சரித்திரப் புகழ் வாய்ந்த, சிறப்பு வாய்ந்த இச்சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் நாட்டு மக்களின் நலன் ஒன்றையே